VERITÉ RESEARCH
Strategic Analysis for Asia

No.5A, Police Park Place, Colombo 00500, Sri Lanka
Tel & Fax: + 94 11 2055544
Email: reception@veriteresearch.org

# இலங்கையின் மீன்பிடி மீதான ஐரோப்பிய ஒன்றியத் தடையின் பின்னணியில் காணப்படும் சந்தேகங்கள் யாவை?

## IUU என்றால் என்ன, அது எவ்வாறு இலங்கையை பாதித்தது?

விதிமுறைக்கு புறம்பான 3 மீன் பிடித்தல் நடவடிக்கைகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியமானது குரல் எழுப்புகின்றது: அவையாவன – சட்டவிரோதமானவை, தெரிவிக்கப்படாதவை மற்றும் ஒழுங்கமைப்பற்றவை – **'IUU மீன் பிடித்தல்'**

இவ் 'IUU மீன் பிடித்தலை' கையாளுவதற்கு ஐரோப்பிய ஆணைக்குழுவானது (EC) தடை அமுலாக்கங்களை ஒரு கருவியாக பாவிக்கின்றது. இத்தடை அமுலாக்கங்கள், EC சட்டமன்ற ஒழுங்குமுறையான இல.1005/2008க்கு அமைவாக பிறப்பிக்கப்படுகின்றது.
சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட மீன்களை ஐரோப்பிய ஒன்றிய (EU) சந்தையில் விற்பனை செய்வதை தடுப்பதை இச் சட்டமானது உறுதி செய்கின்றது. IUU மீன் பிடித்தல் பற்றிய நிகழ்வுகளுக்காக, இலங்கையில் இருந்தான மீன் இறக்குமதியை தடைசெய்வதற்கு அக்டோபர் 14, 2014 இல் தடை அமுலாக்கல் ஒன்றைக் கொண்டு வருவதற்கு EC பரிந்துரைத்தது. வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீரவின் தலைமையின் கீழ் புரூசல் சென்றிருந்த இலங்கை அரசாங்க தூதுக்குழு, அண்மையில் நாடு திரும்பியிருந்தது. முன்னைய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்ட இக்கடினத்தன்மை வாய்ந்த பிரச்சினையை மிகக் கவனமாக கையாள வேண்டிய பொறுப்பில் உள்ள இவ் அமைச்சர், தற்சமயம் EC உடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இவ் உள்நோக்கு கட்டுரையானது, EC தடைச்சட்ட அமுலாக்கலுக்கான சூழ்நிலைகளையும், அவ் அமுலாக்கத்தின் புதிய பரிமாணத்திற்கான சூழ்நிலைகளையும் பற்றி எடுத்தாளுகின்றது.

**மீன் இறக்குமதி தடைக்கு வழி வகுத்த காரண காரியங்கள்**

முதலாவதாக காண்பிக்கப்பட்ட மஞ்சள் அட்டை: தடை அமுலாக்கத்திற்கு முன்னராக நவம்பர் 15, 2012 இல், IUU மீன் பிடித்தல் முறைகளை கையாளுவது தொடர்பான கடமைகளை சரியாக நிறைவு செய்ய தவறிய காரணத்திற்காக EC ஆனது இலங்கைக்கு மஞ்சள் அட்டையை ஒத்ததான ஒரு எச்சரிக்கையை முதலில் பிறப்பித்தது. 2012 இல் இலங்கைக்கு அனுப்பப்பட்ட EC இன் தீர்மானம் விபரிப்பது யாதெனில், ஒத்துழைப்பு அளிக்காத மூன்றாம் தர நாடு என அடையாளம் காணப்படுவதை தவிர்ப்பதற்கு, ஒரு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்ட நாடானது, அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைத் திட்டம் ஒன்றை வகுத்து, அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதாகும்.

**பின்னர் காண்பிக்கப்பட்ட சிவப்பு அட்டை (தடை):** கடந்த வருடம் EC இன் தீர்மானத்திற்கு இணங்க இலங்கையாது EC யினால் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கவும் இல்லை, அதேவேளை அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கான திட்டங்களை முன் வைத்திருக்கவும் இல்லை.

சிவப்பு அட்டை தீர்மானமானது IUU மீன் பிடித்தலுக்கு எதிராக இலங்கை எடுத்த நடவடிக்கைகளில் காணப்பட்ட பல குறைபாடுகளை சுட்டிக்காட்டுகின்றது. இது சர்வதேச சட்ட கடப்பாடுகளை அமுல்படுத்துவதற்கு போதுமான சட்ட கட்டமைப்புக்களை ஏற்கத் தவறியமை, திறன் வாய்ந்ததும் போதியதுமான கண்காணிப்புத் தொகுதி ஒன்றை நடைமுறைப்படுத்தாமை, மீண்டும் நடப்பதை தடுக்கும் தண்டனை திட்டங்களை அமுலாக்காமை, சர்வதேச கட்டுப்பாடுகளான பிராந்திய மீன் வள முகாமைத்துவ நிறுவனங்களின் (REMOs) பரிந்துரைகள் மற்றும் தீர்மானங்களுக்கு இணைவாக நடக்கத்தவறியமை மற்றும் IUU மீன் பிடித்தலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சர்வதேச நடவடிக்கைத் திட்டங்களை கடைப்பிடிக்கத் தவறியமை என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இவற்றிற்கெல்லாம் மேலாக இலங்கையின் பிரதான IUU குறைபாடு யாதெனில், பிடிக்கப்படும் மீன்களின் அளவையும், பிடிக்கப்படும் இடங்களையும்

அறிவிக்க தவறுகின்றமையாகும். அதாவது பிரதான குறைபாடானது, ‘தெரிவிக்கப்படாத மீன் பிடித்தல்’ எனும் பிரிவில் இருப்பதாக தெரிகின்றது.

<u>தடையின் பின் விளைவுகள்</u>

2014/715/ EU தீர்மானத்தின் 16 ம் சரத்து மற்றும் 2014/715/ EU தீர்மானத்தின் பகுதி 2 இல் இலங்கை தொடர்பான விபரமான செய்முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடன் பிடிக்கப்பட்ட மற்றும் உறைய வைக்கப்பட்ட வாள் மீன்கள் மற்றும் துனா மீன்களை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யும் பெரும் ஏற்றுமதியாளர்களுக்கான வரிசையில், இலங்கையானது இரண்டாம் இடத்தில் உள்ளது. 2013 இல் ஐரோப்பாவிற்கான மீன் பிடி இறக்குமதிகளில் யூரோ 74 மில்லியன்கள் (அல்லது ரூபா 13 பில்லியன்கள்) இலங்கைக்காக கணக்கு வைக்கப்பட்டது.
எனவே இத்தடையின் வலிமையானதும், அழிவைத்தரவல்லதுமான தாக்கமானது, இலங்கையின் மீன்பிடி சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருக்கும். 1,92,000 க்கு அதிகமான குடும்பங்கள், 2,22,160 மீனவர்கள் மற்றும் பெண்கள் வாழ்வாதாரமாக மீன்பிடியை நம்பி உள்ளனர்.

**சீனத் தொர்புகள்**

மே, 2013 இல் இலங்கையானது மஞ்சள் அட்டை தகுநிலையின் கீழ் காணப்பட்ட காலத்தில், அப்போதைய மீன் வள அமைச்சரான ராஜித சேனா ரத்ன அவர்கள், இலங்கையின் மீன்பிடி ஏற்றுமதியை அதிகரிப்பதற்காகச் சீனக் கப்பல்களை கொண்டுவரும் திட்டம் ஒன்றை முன்வைத்தார். இச் சீனக் கப்பல்கள் இலங்கைக் கொடியுடன் செயற்படும் என அவர் தெரிவித்திருந்ததாக செய்தி அறிக்கைகள் குறிப்பிட்டிருந்தன. இப் கப்பல்கள், மீன்வள ஏற்றுமதியின் மொத்தத் தொகையை குறிப்பிடத்தக்களவு பெரிய அளவால் அதிகரிக்கும் எனவும் சுட்டிக்காட்டி இருந்தார்.

மேலும் இவ்வாறானதொரு கப்பலை பிரதியீடு செய்ய, இலங்கைக்கு 300 பல நாள் படகுகள் தேவைப்படும் என குறிப்பிட்டிருந்தார்.

**சீனக்கப்பலும் EU தடையும்**

அக்டோபர், 2014 இல் அறிவிக்கப்பட்ட EC தடையின் பிற்பாடு மீன்பிடி அமைச்சுக்கான முன்னாள் ஊடக செயலாளர் டயாஸ்ரீ நரேந்திர ராஜபக்ஷ, முக்கியமாக ஒன்றை குறிப்பிட்டிருந்தார். அதாவது பிரதான EC இன் குற்றச்சாட்டுக்கள், உள்ளூர் மீனவர்களினால் (பெரும்பாலும் பல நாள் படகுகளில் செல்பவர்கள்) வெளிநாட்டு நீரினுள் நிகழ்த்தப்படும் அத்து மீறிய பிரவேசத்தினால் ஏற்பட்டதே அன்றி, சீன இலங்கை BOI கம்பனியால் நிர்வகிக்கப்படும் இச் சீனக்கப்பல்கள் சட்டவிரோதமான மீன் பிடியில் ஈடுபட்டதால் அல்ல எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இவரது கூற்றானது IUU மீன்பிடி தொடர்பாக இலங்கையின் இணக்கபாடின்மை தொடர்பான குற்றச்சாட்டுக்களை விளங்கப்படுத்தவில்லை.சீனக் கப்பல்கள் ‘தெரிவிக்கப்படாத மீன்பிடி’ என்ற குற்றச்சாட்டிற்கு அமைவான மீன் பிடி முறைகளில் ஈடுப்பட்டிருந்தனவா? இவ் வினாவிற்கான விடையானது டிசெம்பர், 2014 இல் வழங்கப்பட்ட புள்ளி விபரங்களில் இருந்து அறியப்படக் கூடும். அப்போதைய தற்காலிக மீன்வள அமைச்சரான சரத்குமார குணரத்ன, சர்வதேச நீர் பரப்பில் இலங்கை கொடியின் கீழ் மீன் பிடிக்கும் 8 சீனக்கப்பல்கள் தமது மீன் பிடியில் 10% ஐ இலங்கைக்கு ஈடாக கொடுக்க வேண்டும் என்ற உடன்படிக்கைக்கு இணங்க செயற்படவில்லை என்று குற்றம் சாட்டியிருந்தார்.

**சீனக் கப்பல்களும் தெரிவிக்கப்படாத மீன்பிடிகளும்**

முன்னாள் தற்காலிக அமைச்சரின் கூற்றிற்கு இணங்க, ஆக மூன்று சீனக்கப்பல்களே மீன் பிடி அளவை தெரிவித்திருந்த அதேவேளை, ஏனைய கப்பல்கள் மீன் பிடிகள் எதுவுமின்றி இலங்கையை வந்தடைந்திருந்தன. இம் மூன்று கப்பல்களும் அவ் ஒன்பது மாதங்களில் மீன் பிடியில் 10%ஐ செலுத்த வேண்டும் என்ற உடன்படிக்கைக்கு இணங்க 51,254 Kg மீன் பிடிகளை இலங்கைக்கு வழங்கி இருந்தன.

இதிலிருந்து இம் மூன்று கப்பல்களினாலும் தெரிவிக்கப்பட்ட மொத்த மீன் பிடியானது அண்ணளவாக 510 தொன்களாக இருந்தது தெரிகின்றது.

இவ் 8 கப்பல்களினதும் உண்மையான கொள்திறமானது சரியாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்து சமுத்திர துனா ஆணைக்குழுவானது இலங்கை BOI கம்பனி ஒன்றிற்கு சொந்தமான, ஒவ்வொன்றும் தேறிய (பதியப்பட்ட தொன் அளவான) 651 தொன்களை உடைய சுருக்கு வலை கப்பல்கள் என இவற்றை பட்டியல் இடுகின்றது. இக்கப்பல் ஒன்றின் வைத்திரு கொள்திறமானது (அதாவது அது கொள்ளக்கூடிய மீன்களின் அளவு) ஆகக்குறைந்தது 300 தொன்களாக வேனும் இருக்கும்.
சர்வதேச ஆணைக்குழுவின் அட்லான்டிக் துனா பாதுகாப்பிற்கான சர்வதேச ஆணைகுழுவிற்கு இணங்க, இவ்வாறான கலங்கள் 2 – 3 மாதங்கள் வரை கடலில் தங்கி இருக்கவல்லன. அவை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை துறைமுகத்திற்கு திரும்புவதாக கருதுவோமாயின், (ஒரு காப்பு அளவீகளுக்கு இணங்க -தரப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இவை குறுகிய தூரப் பிரயாணங்களை மேற்கொள்ளக் கூடும்) இவ் 8 சீனக்கப்பல்களினதும் 9 மாத காலப்பகுதியினூடான, உண்மையான மீன் பிடி அளவுகளை கணிப்பிட முடியும். இதிலிருந்து இவற்றின் தெரிவிக்கப்படாத மீன் பிடிகளின் அளவை கணிப்பிட முடியும். (உரு 1 ஐ பார்க்கவும்)

**உரு 1: சீன இலங்கை கலங்களின் 9 மாத கால பகுதியினூடான தெரிவிக்கப்படாத மீன் பிடியின் கணிப்பீடு.**

| கலங்களின் எண்ணிக்கை | கொள் திறம் | பயண எண்ணிக்கை | எதிர்பாற்கப்படும் பிடியளவு (Mt) | தெரிவிக்கப்பட்ட பிடியளவு (Mt) | தெரிவிக்கப்படாத பிடியளவு (Mt) |
|---|---|---|---|---|---|
| 8 | 300 | 3 | 7,200 (100%) | 510 (7%) | 6,690 (93%) |

பல நாள் படகுகள்
தொடர்பாக 2013 இல் ஒஸ்கார் அமரசிங்கவினால் செய்யப்பட்ட ஆய்விற்கிணங்க, இப்படகுகள் அவற்றின் அளவுகளால் பெருமளவு வேறுபடுவதோடு, ஒரு பயணத்தின்போது 1.8 தொன்கள் முதல் 3.4 தொன்க

ள் வரையான மீன் பிடிகளை கொண்டுவரவல்லன. இவ் ஆய்வில் பயன்படு த்தப்பட்ட தரவுகளின் படி நாம் ஒரு பொதுவான அனுமானத்திற்கு வர முடியும். அதாவது ஒரு பல நாள் படகானது சராசரி 3 தொன் எடையுள்ள மீன்களுடன் ஒரு தரம் திரும்புமாயின் மாதம் ஒருமுறை பயணத்தை மேற்கொள்ளும் ஒரு படகானது, அவ் 9 மாத காலப்பகுதியினூடாக அண்ணளவாக 21 தொன் மீன்களுடன் திரும்பும்.

மீன் பிடி மற்றும் நீர் வாழ் அங்கிகள் திணைக்களத்தின் கருத்துப்படி 4,000 ற்கும் அதிகமான பல நாள் படகுகள் இலங்கை நீர் பரப்பில் செயற்படுவதற்கென பதிவு செய்யப்பட்டுள்ளன. எவ்வாறு இருப்பினும் குறிப்பிட்ட எந்தவொரு நேரத்திலும் அண்ணளவாக 1,200 படகுகளே ஒரு ஆ ண்டில் செயற்படுத்தப்படுகின்றன என இத்தொழில் துறையினர் உறுதி செய்கின்றனர். எனவே இப் பல நாள் படகுகள் மூலம் 9 மாத கால பகுதியினூடாக பிடிக்கப்பட்ட மீன்களின் தொகையை அண்ணளவாக 32,400 தொன்கள் என கணிப்பது பொருத்தமாகும். (ஒரு பல நாள் படகானது சராசரியாக 3 தொன்களுக்கும் குறைவான மீன்பிடிகளை யே ஒரு பயணத்தின்போது கொண்டு வருகின்றது என எடுக்கப்பட்ட பொதுவான அனுமானத்திற்கு இணங்க) எனவே மீன்பிடி கொள்திறனின் படி 8 சீனக்கலங்கள் 9 மாத காலப் பகுதியினுள் செய ற்படுவதானது, செயற்படுத்தப்பட்ட மொத்த பல நாள் படகுத் தொகுதிகளின் ஆகக்குறைந்தது 22%க்கு நிகரானதாகும். எனவே அறிக்கையிப்படாத (93% என்ற வியப்பூட்டும் வீதத்தில்) இவ் 8 சீனக் கலன்களும் EC விதி முறைகளுடனான இலங்கையின் இணக்கப்பாடு தொ டர்பான மொத்த மதிப்பீட்டில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை செலுத்தவல்லன.

**தெரிவிக்கப்படாத மீன் பிடியில் தொடர்ந்தும் காணப்படும் தளம்பல்கள்**

அறிக்கையிடப்படாத இலங்கையின் பல நாள் மீன்பிடி தொடர்பான மிகச்சரியான வீத அளவுகள் தொடர்பான

முறையான கணிப்பீடுகள் எதுவும்  இல்லை.
எனவே அறிக்கையிடப்படாத மீன்பிடிகள் தொடர்பான 10%, 15% மற்றும் 25% என்ற சாத்தியப்படக்கூடிய சந்தர்ப்பங்களை கருதலாம். கீழ்வரும் உரு 2 ஆனது இவ்வேறுபட்ட சந்தர்ப்பங்களில், அறிமுகப்படுத்தப்பட்ட 8 சீனக்கலங்களினாலும் எவ்வாறு இலங்கையின் தெரிவிக்கப்படாத மீன் பிடிகளானது அதிகரிக்கின்றது  என்பதை காட்டுகின்றது.

உரு 2: சீன
இலங்கை கலங்களின் அறிமுகத்தால் அதிகரிப்படைந்த அறிக்கையிடப்படாத மீன்  பிடி

| 8 சீனக் கலங்களினதும் அறிமுகத்தின் முன்னர் | | | 8 சீனக் கலங்களினதும் அறிமுகத்தின் பின்னர் | | | தெரிவிக்கப்படாத மீன் பிடியில் ஏற்பட்ட அதிகரிப்பு (Mt) |
|---|---|---|---|---|---|---|
| மொத்த பிடியளவு (Mt) | கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் | தெரிவிக்கப்படாத பிடியளவு (Mt) | மேலதிக பிடியளவு (Mt) | தெரிவிக்கப்படாத மேலதிக பிடியளவு (Mt) | மொத்த தெரிவிக்கப்படாத பிடியளவு (Mt) | |
| 32,400 | 10% | **3,240** | 7,200 | 6,690 | **9,930** | 206% |
| 32,400 | 15% | **4,860** | 7,200 | 6,690 | **11,550** | 138% |
| 32,400 | 25% | **8,100** | 7,200 | 6,690 | **14,790** | 83% |

மேற்தரப்பட்ட கணிப்பீடின் படி 8 சீன கலங்களினாலும் EC உடனான இணக்கப்பாட்டிற்கு ஏற்படுத்தப்படும் பங்கமானது மிக மிக அதிகம்
என தெளிவாகின்றது. உண்மையில் இலங்கையானது 8 சீனக்கலங்களையும் அறிமுகப்படுத்த  முன்னர் EC உடன்
நல் இணக்கப்பாட்டை கொண்டிருந்த அதேவேளை, அவற்றின் அறிமுகத்தின் பின்னர்  பல இணக்கபாடில்லா சந்தர்ப்பங்களை சந்திக்க  வேண்டி இருந்தது. சீனக்கலங்களை அறிமுகப்படுத்த
முன்னரே இலங்கையானது மஞ்சள் அட்டை
எச்சரிக்கை வழங்கப்பட்டிருந்தமையை அவதானிக்க வேண்டியது
மிக இன்றியமையாததாகும்.  சிவப்பு  அட்டை
என்று சொல்லக்கூடிய தடையானது, இக்கலங்களின் அறிமுகத்தின் பின்ன

ர் நடைமுறைக்கு வந்தது.
மஞ்சள் அட்டை எச்சரிக்கையின் பின்னர் 30% க்கும் அதிகமான அதிகரிப்பை காண்பிக்கும் எந்தவொரு தெரிவிக்கப்படாத மீன்
பிடி முறைமையும், EC இனால் புறக்கணிக்க முடியாதளவுக்கு பெரும் விடயமாகும். எனவே அது தடையை பிறப்பித்தது.

எனவே இவ் ஆய்வுக் கட்டுரை தெரிவிப்பது யாதெனில், மஞ்சள் அட்டை எச்சரிக்கை நிலையில்
இருந்து, தடை அமுலாக்கத்தை கொண்டு வருவதற்கு காரணமாக அமைந்தவை, 8 சீனக்கலங்களினது அறிமுகமும், அவற்றினால் பிடிக்கப்பட்ட பாரிய அளவிலான தெரிவிக்கப்படாத மீன் பிடித்தலுமாகும்.

எனவே இதற்கான தீர்வானது மிகவும் வெளிப்படையான ஒன்றாகும். இலங்கை அரசானது உடனடியாக இவ் 8 கலங்களும் தமது உண்மையான மீன் பிடியை அறிக்கை இடுவதை உறுதி செய்வதுடன் கடந்த காலங்களில்
செய்த குற்றங்களுக்கு தண்டனையை வழங்கி, இவ் 8 கலங்களையும் பணியில் அமர்த்தி BOI கம்பனியின் நிர்வாகிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

சர்வதேச ரீதியில் இலங்கையின் நம்பகத்தன்மைக்கு குந்தகம் விளைவித்து
நாட்டின் பொருளாதாரத்தை வலிமை இழக்கச் செய்யும் இத்தனியார் நிறுவனங்களின் மீது
மீண்டும் இக் குற்றம் இடம்பெறாத அளவு தண்டனைகளை வழங்குவதை இலங்கை அரசு உறுதிப்படுத்துவதானது, நற்பொருளாதாரத்தை அமைக்க உதவும். இலங்கைக்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துவரும் இவ்வேளையில் , இப் போக்கிரித்தனமான செயற்பாடுகள் மீண்டும் இடம்பெறுவதை தடுத்து நிறுத்தக் கூடிய தண்டனைகளை வழங்காவிடில், இவ்வாறான செயற்பாடுகள் பல்கிப்பெருகி நாட்டின் முழுப்பொருளாதாரத்தையும் அடியோடு நாசமாக்கும். இச் செயற்பாடுகளை பாதுகாக்கும் நடவடிக்கைகள்
அல்லது இக் குற்றங்களுக்கு எதிராக எடுக்கப்படும் குறை நடவடிக்கைகள் இலங்கையின் எதிர்கால பொருளாதாரத்தை அடியோடு தகர்த்துவிடும்.

இக் கட்டுரையானது 'இங்லிஷ் பிரஸ்' பத்திரிகையில் 2015 பெப்ரவரி, 11 இல் முதலில் பிரசுரிக்கப்பட்டது. அதன் பின்னர் இலங்கை அரசானது இலங்கைக் கொடியுடன் மீன்பிடியில் ஈடுபட்ட அவ் 8 சீனக் கம்பனிகளினதும் மீன்பிடி உரிமத்தை நீக்கம் செய்தது என தெரிவிக்கப்படுகின்றது.

**வெரிட்டே றீசெர்ச் ஆசியாவில் உள்ள அரசாங்கங்கள் மற்றும் தனியார் துறையினருக்கு வினைத்திறம் வாய்ந்த பகுப்பாய்வுகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்றது.**

**கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. Email: *insights@veriteresearch.org***